இனிமையான குழந்தைகளே! தந்தையின் உதவியாளர்கள் ஆகி அனைவரையும் புதிய உலகத்திற்கான முயற்சியை செய்வியுங்கள். எப்படி நீங்கள் ஞானம் நிறைந்தவர் ஆகியிருக்கிறீர்களோ அதுபோலவே மற்றவர்களையும் ஆக்கியபடி செய்யுங்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் இப்போது எந்த நினைவில் இருக்க வேண்டும்? நினைவின் மூலம் ஏற்படும் அதிசயம் என்ன?

பதில்: உங்களுக்கு இப்போது கிடைத்திருக்கக் கூடிய விதை மற்றும் மரத்தின் (கல்ப விருட்சம்) ஞானத்தின் நினைவில் இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலம் நீங்கள் சக்கரவர்த்தி இராஜா ஆகி விடுகிறீர்கள் - இதுவே நினைவின் மூலம் ஏற்படும் அதிசயமாகும். தந்தை குழந்தைகளுக்கு நினைவூட்டுகிறார் - குழந்தைகளே, நீங்கள் அரை கல்ப காலம் பக்தி செய்தீர்கள் என்ற நினைவு வந்திருக்கிறது. இப்போது நான் உங்களுக்கு பக்தியின் பலனைக் கொடுப்பதற்காக வந்துள்ளேன். நீங்கள் மீண்டும் வைகுண்டத்தின் எஜமானாக ஆகின்றீர்கள். எப்படி தந்தை இனிமையானவரோ அப்படி தந்தையின் ஞானமும் இனிமையானது, அதனை சிந்தனை செய்து நினைத்து நினைத்து சுகத்தை அடைய வேண்டும்.

பாடல்: விழித்தெழுங்கள் பிரியதர்ஷினிகளே, விழித்தெழுங்கள். . .

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள். இன்று தீபாவளியாகும். புதிய யுகம் தீபாவளி என சொல்லப்படுகிறது. சத்யுகத்தில் தீபாவளி ஏதும் கொண்டாடப்படுவதில்லை, ஏனென்றால் அங்கே அனைத்து ஆத்மாக்களின் ஜோதியும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். நாம் புதிய உலகத்தில் இராஜ்ய பாக்கியத்தை எடுப்பதற்கான முயற்சியை ஸ்ரீமத்படி செய்து கொண்டிருக்கிறோம் என குழந்தைகள் அறிவார்கள். நீங்களும் திரிகாலதரிசியாக ஆகியிருக்கிறீர்கள். கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலத்தை அறிந்தவர் கள் திரிகாலதரிசி எனப்படுகின்றனர். உங்களுக்கு இப்போது மூன்று காலங்களின் ஞானம் உள்ளது. எனவே நீங்கள் மற்றவர்களுக்கும் புரிய வைக்க வேண்டும். நீங்களும் முள்ளிலிருந்து மலராக ஆகின்றீர்கள். மற்றவர்களையும் மாற்ற வேண்டும். கடந்த காலத்தின் வரலாறு - புவியியலை அறிவதன் மூலம் எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதையும் தெரிந்து கொண்டு விடுகிறீர்கள். எதிர்காலத்தை அறிவதன் மூலம் கடந்த காலம், நிகழ் காலத்தையும் கூட தெரிந்து கொண்டு விடுகிறீர்கள் - இதற்கு ஞானம் நிறைந்தவர் என சொல்லப்படுகிறது. கடந்த காலம் கலியுகமாக இருந்தது, நிகழ் காலம் சங்கம யுகம். பிறகு எதிர்காலத்தில் சத்யுகம், திரேதா யுகம் வரவுள்ளது. ஆக குழந்தைகளாகிய நீங்கள் சக்கரத்தை அறிந்து கொண்டீர்கள் மற்றும் புதிய உலகிற்குச் செல்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் மற்றும் பாபாவின் உதவியாளர்கள் ஆகி மற்றவர்களையும் முயற்சி செய்வித்துக் கொண்டிருப்பதில் ஈடுபட்டிருக்கிறீர்கள், தந்தை காணாமல் சென்று கிடைத்திருக்கிறார், நீங்களும் காணாமல் சென்று கிடைத்திருக்கிறீர்கள், ஏனென்றால் ஐந்தாயிரம் வருடங்களுக்குப் பிறகு கிடைத்திருக் கிறீர்கள். ஆக பிரியதர்ஷினிகளை அலங்கரித்து புதிய உலகிற்கு அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளார்.

குழந்தைகளின் புத்தியில் மேலிருந்து தொடங்கி மூல வதனம், சூட்சும வதனம் பற்றிய ஞானம் உள்ளது. எந்தெந்த தர்ம ஸ்தாபகர்கள் எப்போது மற்றும் எப்படி மேலிருந்து வந்து தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றனர் என்பதை குழந்தைகள் அறிவார்கள். தந்தை உங்களை ஞானம் நிறைந்தவர்களாக ஆக்கியிருக்கிறார். அவர் மிகவும் அன்பானவர் என சொல்லப்படுகிறார். இனிமையிலும் இனிமையானவர். எவ்வளவு இனிமை யானவர் என நீங்கள் அறிவீர்கள். அவருடைய மகிமை மிகவும் அளவு கடந்தது, அவருடைய ஆஸ்தியின் மகிமையும் மிகவும் எல்லையற்றதாகும். பெயரே சொர்க்கம், ஹெவன், பாரடைஸ், மலர்த்தோட்டம் ஆகும். பரமாத்மா இறைத்தந்தை எனப்படுகிறார், துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுப்பவர். ஆக அவரை எவ்வளவு நினைவு செய்ய வேண்டும். ஆனால் நாடகத்தின்படி நினைவு வருவதில்லை. இந்த கீதை எவ்வளவு நன்றாக உள்ளது. வீட்டில் 3-4 ரிக்கார்டுகள் (பாடல்கள்) கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்த ரிக்கார்டுகள் கூட தந்தையின் நினைவை ஊட்டுகின்றன. புதிய தெய்வீக உலக சுயராஜ்யம் அதாவது ஆத்மாவுக்கு இப்போது இராஜ்யம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை பிராமணர்கள்தான் அறிந்திருக்கின்றனர். லௌகீக தந்தையின் மூலம் கிடைத்த ஆஸ்தியை பரமாத்மாவின் மூலம் கிடைத்தது என சொல்வது கிடையாது. தந்தையிடமிருந்து இராஜ்யத்தை எடுத்தோம் பிறகு இழந்தோம் என நீங்கள் அறிவீர்கள். இப்போது மீண்டும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். சத்யுகத்தில் அழகாக (வெள்ளையாக) இருந்தீர்கள், பிறகு கருப்பாக ஆகிவிட்டீர்கள். சியாம் சுந்தர் என பாடவும் செய்கின்றனர். சியாமாக இருந்தேன் - இப்போது சுந்தராக ஆவதற்கு சத்குரு கிடைத்திருக் கிறார். இப்போது சத்குரு மற்றும் கோவிந்தன் இருவரும் நின்றிருக்கின்றனர். பிறகு குருவே உங்களின் பலியாகிறோம். . . என சொல்கின்றனர். நீங்கள் கிருஷ்ணனாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். பலியாகிய குழந்தைகள் நீங்கள் இப்படி ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். கிருஷ்ணர் பசுக்களை மேய்த்தார் என அவர்கள் சொல்கின்றனர். பிறகு பிரம்மாவைப் பற்றியும் கூட அவர் பசுக்களின் கோசாலை வைத்திருந்தார் என சொல் கின்றனர்.ஆக கோசாலை கிருஷ்ணரு டையதும் அல்ல, பிரம்மாவுடையதும் அல்ல. கோசாலை சிவபாபா வுடையதாகும்.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் பண்டிகைகளின் இரகசியத்தையும் புரிந்து கொண்டிருக் கிறீர்கள். தீபாவளி சத்யுகத்தில் ஏற்படப் போகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அங்கே ஜோதி பிரகாசமாக ஜொலித்திருக்கும். உங்களுடைய தீபாவளி 21 பிறவிகளுக்கு இருக்கும். இங்கே வருடா வருடம் கொண்டாடுகின்றனர். இன்று கொண்டாடுகின்றனர், அடுத்த நாள் தீபம் அணைந்து விடுகிறது. சத்யுகத்தில் கொண்டாடுவார்கள் என்றால் பட்டாபிஷேகத்தன்று பட்டாசு கள் கொளுத்துவார்கள். இங்கேயோ பைசா பெறாத பட்டாசுகளை வைத்து விளையாடு கிறார்கள், அதனால் எத்தனையோ விபத்துகள் ஏற்படுகின்றன. அங்கேயோ பெரிய அளவில் பட்டாபிஷேகம் நடக்கும். இங்கே இராஜ்யம் கிடைத்தது என்றால் வருடா வருடம் கொண்டாடு கிறார்கள். ஆனால் இந்த இராஜ்யத்தில் சுகம் கிடையாது. இது பிரஷ்டாச்சார (கீழான) உலகமாக உள்ளது, அது சிரேஷ்டாச்சார (உயர்வான) உலகமாக இருந்தது. உங்களை எவ்வளவு புத்திசாலிகளாக ஆக்குகிறேன் பாருங்கள் என தந்தை சொல்கிறார். தந்தை திரிலோகநாதர் எனப்படுகிறார். மூன்று உலகங்களின் எஜமானாக ஆவதில்லை. அவருக்குள் ஞானம் உள்ளது.

உங்களை வைகுண்டத்தின் எஜமானாக ஆக்குகிறார். உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும். அரைக் கல்பம் நீங்கள் பக்தி செய்தீர்கள், இப்போது தந்தை கிடைத்திருக்கிறார். தந்தை இப்போது நினைவூட்டுகிறார் - நினையுங்கள், நினையுங்கள் என சொல்கிறார். யாரை? தந்தையை மற்றும் தந்தையின் படைப்பைக் குறித்த ஞானத்தை, விதை மற்றும் விருட்சத்தை. இந்த நினைவின் மூலம் நீங்கள் சக்கரவர்த்தி இராஜாவாக ஆகி விடுகிறீர்கள். நினைவின் அதிசயத்தைப் பார்த்தீர்களா, எதிலிருந்து என்னவாக ஆக்கி விடுகிறது என்று? இது ஆன்மீக ஞானம் எனப்படுகிறது. ஆத்மாக்களின் தந்தை ஞானத்தை சொல்கிறார். கீதையில் கிருஷ்ணரின் பெயரைப் போட்டு விட்டனர். ஆனால் தந்தை உங்களுக்கு ஞானத்தைக் கொடுத்து தன்னை விடவும் உயர்ந்தவர்களாக ஆக்குகிறார். நீங்கள் வைகுண்டத்தின் எஜமானாக ஆகின்றீர்கள். எப்படி அவர்கள் படிப்பை படிக்கும்போது நாம் வக்கீல் ஆகப் போகிறோம் என புத்தியில் இருக்கிறது. நாம் பிச்சைக் காரனிலிருந்து இளவரசனாக ஆகப் போகிறோம் என நீங்கள் அறிவீர்கள். பிறகு மகாராஜாவாக ஆகப் போகிறோம். இப்போது தந்தை, ஆசிரியரின் ரூபத்தில் படிப்பித்துக் கொண்டிருக்கிறார். லௌகிகத்தில் குழந்தை 5 வருடங்கள் வரை தந்தையுடன் இருக்கும், பிறகு ஆசிரியரிடம் போகிறது, வயதான பிறகு குருவை ஏற்பாடு செய்கின்றனர். இங்கேயோ தந்தையுடையவர்களாக ஆகினீர்கள், தந்தை ஆசிரியரின் ரூபத்தில் படிப்பினை கொடுக்கிறார், மேலும் சத்கதிக்காக உடன் அழைத்துச் செல்கிறார். அந்த குருமார்கள் உடன் அழைத்துச் செல்வதில்லை. அவர்களே முக்தியில் செல்வதில்லை. அவர்கள் யாத்திரை அழைத்துச் செல்கிறார்கள், நீங்களும் வழிகாட்டிகள், அவர்களும் வழிகாட்டிகளாக இருக்கின்றனர். ஆனால் அது கரடு முரடான யாத்திரையாகும், இந்த ஞானம் உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு குஷி இருக்க வேண்டும். இது மாணவ வாழ்க்கை எனும்போது ஏன் மறக்க வேண்டும்? ஆனால் மாயை அந்த குஷியை நிலைக்க விடுவதில்லை, ஏனென்றால் கர்மாதீத (கர்மங்களை வென்ற முழுமை) நிலை இறுதியில் ஏற்படப் போகிறது. நினைவின் பலன் என சொல்லியிருக்கிறேன் அல்லவா. நினைத்து நினைத்து சுகத்தை அடையுங்கள், அங்கே வலி இருக்காது. ஜீவன் முக்தி என சொல்லப்படுகிறது. எப்படி தந்தை இனிமையானவரோ அப்படி தந்தையின் ஞானமும் இனிமை யானதாகும். பாபாவின் மகிமை எல்லையற்றதாகும் அதாவது கரை காண முடியாதது. இது பக்தியில் சொல்லப்படுகிறது. நீங்கள் இதனை சொல்ல முடியாது ஏனென்றால் உங்களுக்கு முழுமையான ஞானம் கிடைத்திருக்கிறது. நீங்கள் மிகவும் இனிமை யானவர்களாக ஆக வேண்டும். எனக்குள் எந்த விகாரமும் இல்லையல்லவா, பிறருடைய அவகுணங்களைப் பார்ப்பதில்லையல்லவா? என தன்னைச் சோதனையிடுங்கள். மிகவும் இனிமையான திருஷ்டியை வைக்க வேண்டும். பாபாவின் குழந்தைகள் எவ்வளவு பேர் இருக்கின்றனர். அனைவரின் மீதும் இனிமையான திருஷ்டி உள்ளதல்லவா. நீங்களும் கூட அப்படி வைக்க வேண்டும். இராதா, கிருஷ்ணர் மற்றும் இலட்சுமி, நாராயணருக் கிடையில் என்ன சம்மந்தம் உள்ளது என மனிதர்களுக்குத் தெரியாது, ஆகையால் படங்களையும் உருவாக்கினார். சிறுவயதில் இராதா, கிருஷ்ணராக இருந்தவர்கள் சுயம்வரத்திற்குப் பிறகு இலட்சுமி - நாராயணராக ஆகின்றனர். குழந்தைகளே நீங்கள் தேவதைகளாக இருந்தீர்கள் என தந்தை வந்து நினைவூட்டுகிறார். இருந்தோம் என குழந்தைகள் சொல்கின்றனர். பிராமண தேவி தேவதாய நமஹ என சொல்கின்றனர், பிராமணர்கள் சொல்கின்றனர்,

ஆனால் பிராமண, தேவதா, க்ஷத்திரிய என மூன்று தர்மங்களை ஸ்தாபனை செய்கிறார் என தெரியாது. ஆக பிராமணர்களின் தந்தை பிரம்மா மற்றும் சிவன். தந்தை சாதாரண ரூபத்தில் வருகிறார். இந்த இரதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இது பாக்கியசாலி இரதம்.

மனிதர்கள் தீபாவளியன்று இலட்சுமியிடம் பணத்தைக் கேட்பதற்காக அழைப்பு விடுக்கின்றனர். முன்னர் நீங்களும் கூட கேட்டுக் கொண்டிருந்தீர்கள். இப்போது நீங்கள் இலட்சுமி - நாராயணராக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கேயோ பிச்சையே பிச்சை கேட்டுக் கொண்டி ருக்கின்றனர். ஆண் குழந்தை கொடு, பணம் கொடு என்றெல்லாம் அலறுகின்றனர். சத்யுகத்தில் இப்படி கேட்பதில்லை. சிவபாபா குழந்தைகளின் கருவூலம் அனைத்தும் நிரப்பி விடுகிறார். தந்தை சொர்க்கத்தைப் படைப்பார் - நரகத்தைப் படைக்க மாட்டார். இப்போது சொர்க்கவாசியாக ஆக்குவதற்காக நரகத்தில் வந்திருக்கிறார். அனைவருமே தூய்மையற்றவர்கள், நாம் நரகவாசி களாக இருக்கிறோம் என்பதை அறிவதில்லை. சொர்க்கவாசியாக இருந்தவர்கள் இப்போது நரகவாசிகளாக ஆகியுள்ளனர். இப்போது மீண்டும் சொர்க்கவாசிகளாக ஆகிக் கொண்டிருக் கின்றனர். சிவபாபாவின் அகால் தக்த் (அகாலனின் சிம்மாசனம்) இந்த பிரம்மா ஆவார், இவருக்குள் வந்து அகால மூர்த்தியான சிவபாபா அமர்கிறார். ஆத்மாவும் அகால மூர்த்தியாகும். ஆத்மாவின் சிம்மாசனம் இந்த புருவ மத்தியாகும். அடையாளம் உள்ளது, நெற்றியில் திலகம் இடுகின்றனர், இன்றைய நாட்களில் காளை மாடுகளுக்கும் கூட திலகத்தை வைக்கின்றனர். ஆக இந்த புருவ மத்தியானது சிவபாபா மற்றும் பிரம்மா இவர்கள் இருவரின் சிம்மாசனம் ஆகும். ஆக நான் வந்து ஞானத்தைக் கொடுக்கிறேன், நிறைந்த ஞானத்துடன் இருக்கிறேன். நான் எதுவும் அனைவரின் மனதையும் அறிவது கிடையாது, எண்ணங்களைப் படிப்பது கிடையாது. ஆம், மனதின் எஜமான் என சொல்ல முடியும், ஏனென்றால் மனம் என்று ஆத்மாவுக்கு சொல்லப்படுகிறது. ஆக நான் ஆத்மாவின் எஜமான் ஆவேன், உடலின் எஜமான் அல்ல. சாதுக்கள் இப்படி சொல்கின்றனர் அல்லவா - நான் எஜமானன். ஆக நான் அழிவற்ற ஆத்மாக்களின் எஜமான் ஆவேன் ஏனென்றால் நான் அவிநாசியாக (அழிவற்றவராக) இருக்கிறேன். நீங்கள் அழியக்கூடிய பொருட்களுக்கு எஜமானாக ஆகிறீர்கள் ஏனென்றால் நீங்கள் ஒரு அழியக் கூடிய சரீரத்தை விடுத்து மற்றொன்றை எடுக்கிறீர்கள். நீங்கள் இப்போது வைகுண்டத்திற்குப் போகிறீர்கள், அதற்காக படிப்பை படித்துக் கொண்டிருக்கிறீர்கள். சொல்கிறார் அல்லவா - எதுவரை வாழ்ந்திருக்கிறோமோ அதுவரை ஞான அமிர்தம் பருக வேண்டும். எப்போது படிப்பு முடிவடையுமோ அப்போது இந்த சரீரமே விடுபட்டு விடும். சிருஷ்டியை படைக்கச் செல்வேன் என பரமாத்மாவுக்கு சங்கல்பம் (எண்ணம்) வந்தது என சொல்கின்றனர். எப்போது நேரம் வருமோ அப்போதுதான் நடிப்பை நடிக்கச் செல்லலாம் என்ற சிந்தனை எழும், மேலும் வந்து நடிப்பை நடிப்பார். தந்தை சொல்கிறார் - எப்படி நீங்கள் நடிப்பை நடிக்கிறீர்களோ, அது போல நானும் நடிக்கிறேன். மற்றபடி நான் பிறப்பு, இறப்பில் வருவதில்லை. ஆகையால் எனக்கு எவ்வளவு மகிமை உள்ளது. வைகுண்டத்திற்கும் மகிமை உள்ளது. சன்னியாசிகளுக்கு சத்யுகத்தின் சுகத்தைப் பற்றி தெரியாது. அங்குள்ள சுகம் அவர் களுக்கு கிடைக்கவே போவதில்லை. சத்யுகத்தைக் குறித்தும் அங்கே கம்சன் இருந்தார் என சொல்லியிருக்கின்றனர் அல்லவா. ஆக அங்கும் கூட சுகம் இருக்கவில்லை என

புரிந்து கொள்கின்றனர் அல்லவா. எனவே சுகம் என்பது காகத்தின் எச்சத்திற்குச் சமமானது என பிறருக்கும் சொல்கின்றனர். ஆக இப்படி சொல்லி பிறரையும் சன்னியாசம் செய்விக்கின்றனர். குழந்தைகளாகிய நீங்கள் சொர்க்கத்தின் சுகத்தை அடைகிறீர்கள். இது இறுதிப் பிறவியாகும். அனைவரும் இறக்கவும் போகின்றனர். நான் வந்திருப்பதும் உங்களை அழைத்துச் செல்வதற் காக, நீங்கள் இங்கேயே அமர்ந்திருக்கப் போகிறீர்களா? கொசுக் கூட்டத்தைப் போல அனைவரையும் அழைத்துச் செல்வேன். ஆக, மம்மா பாபா போல முயற்சி செய்து பதவியை எடுத்துக் கொள்ள வேண்டும். பிரம்மாவின் முக வம்சாவளியாக இருக்கிறீர்கள் அல்லவா. எவ்வளவு சத்யுகம், திரேதா யுகத்தில் தேவதைகள் இருப்பார்களோ, அவ்வளவுதான் பிரம்மா முக வம்சாவளியினரும் உருவாகின்றனர். ஆக, சட்டப்படி தாய், தந்தையும் இருக்கின்றனர், பிறகு கவனித்துக் கொள்வதற்காக யாரையாவது நியமிக்கவும் படுகிறது. புதிய புதிய குழந்தைகள் வந்தபடி இருப்பார்கள், படிப்பு நடந்தபடி இருக்கும். கடைசி வரை வளர்ச்சி யடைந்தபடி இருக்கும். மிகவும் நன்றாக வளர்த்தபடி இருக்க வேண்டும். அவர் தோட்டத்தின் சொந்தக்காரர். செண்டர்களில் (சேவை மையங்களில்) இருக்கும் நீங்கள் தோட்ட வேலைக் காரர்கள். தோட்ட வேலைக்காரர்கள் செடிகளை கவனித்துக் கொள்ள வேண்டும். தோட்ட வேலைக்காரரே சரியில்லை என்றால் அவர் செடிகளை எப்படி கவனிப்பார்? தோட்ட வேலைக்காரர் உருவாக்கக் கூடிய நல்ல நல்ல மலர்த் தோட்டத்தை தோட்ட சொந்தக்காரரும் பார்த்து மிகவும் குஷியடைகிறார். பிறகு தோட்ட சொந்தக்காரர் பார்ப்பதற்காகச் செல்கிறார் - யார் யார் மிக நல்ல மலர்த்தோட்டத்தை உருவாக்கியிருக்கின்றனர் என்று, யார் யார் நல்ல தோட்ட வேலைக்காரர்கள் என நீங்களும் அறிவீர்கள். நல்ல நல்ல தோட்ட வேலைக்காரர்களுக்கு பரிசும் கிடைக்கிறது. தோட்ட வேலைக்காரர்களாக உங்களின் சம்பளமும் அதிகரித்தபடி செல்கிறது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தனது இலட்சியத்தை நினைவு செய்ய வேண்டும், ஏனென்றால் இப்போது வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் எனும்போது வீட்டை நினைவு செய்ய வேண்டும். நினைவு செய்யாமல் சாந்தி தாமத்திற்குச் செல்ல முடியாது. இல்லா விட்டால் மிகவும் தண்டனை அடைய வேண்டியிருக்கும். நல்ல பதவியும் அடைய முடியாது. இந்த சமயத்தில் சூட்சும வதனத்திற்குப் போகிறவர்கள் சேவையின் பொருட்டு போகின்றனர். முதல் நம்பரில் பாபா சேவை செய்கிறார், இரண்டாவது நம்பரில் மம்மா, ஏனென்றால் மம்மா இரண்டாம் நம்பரில் வர வேண்டும். ஆக குழந்தைகளாகிய நீங்களும் மம்மா பாபாவை பின்பற்ற வேண்டும். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தந்தைக்குச் சமமாக மிகவும் இனிமையானவராக ஆக வேண்டும். அனைவரையும் இனிமையான திருஷ்டியில் பார்க்க வேண்டும். யாருடைய அவகுணத்தையும் பார்க்கக் கூடாது.

2. இறை மாணாக்கரின் வாழ்க்கை என்ற குஷியில் இருக்க வேண்டும். வாழும் வரை தினம் தோறும் படிப்பை படிக்க வேண்டும்.

வரதானம் : அன்பு என்ற அக்னியின் மூலம் ஒரு தீபத்திலிருந்து பல தீபங்களுக்கு ஔி ஏற்றக்கூடிய உண்மையான தீபாவளியை கொண்டாடக்கூடிய குலவிளக்கு ஆகுக.

ஆத்மா என்ற தீபங்களாகிய உங்களின் அன்பை ஒரே ஒரு தீபங்களின் அரசனான பாபாவோடு இணைப்பது தான் உண்மையான தீபாவளி ஆகும். தீபத்தில் அக்னி இருக்கிறது, அதுபோல தீபங்களாகிய உங்களின் அன்பு தான் அக்னியாக இருக்கிறது, இதனால் அஞ்ஞானம் என்ற இருள் விலகி செல்கிறது. உலகத்தினர் தீபாவளியன்று மண்ணால் செய்யப்பட்ட விளக்கை ஏற்றுகிறார்கள், ஆனால் சைதன்யமான தீபங்களாகிய நீங்கள், குலத்தின் விளக்காகவும், பாப்தாதாவின் ஆசைகளின் தீபங்களாகவும் இருக்கிறீர்கள். உங்களுடைய ஒரே இரசனை, நிலையாக ஒரே நிலையில் எரிந்துக் கொண்டிருக்கும் விளக்கிலிருந்து அனைத்து தீபங்களும் ஏற்றப்படும் பொழுது தான் உண்மையான தீபாவளி உருவாகும்.

சுலோகன்: காலத்தின் முக்கியத்துவத்தை தெரிந்துக் கொண்டுவிட்டால், அனைத்து பிராப்திகளின் பொக்கி˜த்திலும் நிறைந்தவர் ஆகிவிடலாம்